MAY 2024

U/ID 33208/ UCT2C/UCL2B

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் 30 சொற்களில் விடை எழுதுக.

1. பொது மொழி என்றால் என்ன?
2. திணை எத்தனை வகைப்படும் ? யாவை?
3. அன்மொழித்தொகை என்றால் என்ன? சான்று தருக.
4. செய்வினை செயப்பாட்டு வினைக்குச் சான்று தருக.
5. தன்மை ஒருமை வினைமுற்று அமையுமாற்றைக் குறிப்பிடுக.
6. குறிப்பு வினைமுற்றுவினை எச்சமாதலை எழுதுக.
7. இயற்கைப் பொருளைக் கூறும் முறையை எழுதுக.
8. பண்புத்தொகையின் இலக்கணத்தை எழுதுக.
9. 'ஓடு' எனும் இடைச்சொல் பொருள் யாது?
10. 'தெய்ய' எனும் இடைச்சொல் பொருளை எழுதுக.
11. ஐந்தறிவு உயிர்கள் யாவை?
12. உயிரில்லாப் பொருள்களின் தொழில்பண்புகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை எழுதுக.

13. உயர்திணை ஆண்பால் பெயர்களை விளக்குக.

14. வினையெச்ச வாய்பாடுகளை எழுதுக.

15. வழுக்களின் வகைகளை விளக்குக.

16. 'உம்' எனும் இடைச்சொற் பொருள்களை எழுதுக.

17. 'மற்று' எனும் சொற்பொருள் விளக்கத்தை எழுதுக.

18. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதுக.

19. ஓசை எனும் ஒரு சொல்லின் பல உரிச்சொற்பொருளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் 500 சொற்களில் விடை எழுதுக.

20. வேற்றுமையின் பெயரும் முறையும் குறித்து கட்டுரைக்க.

21. பெயரெச்சத்தின் இலக்கணத்தையும் வகைகளையும் விவரிக்க.

22. வினாவின் வகைகளை சான்றுடன் எழுதுக.

23. இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்களை விளக்குக.

24. உயிர்ப் பொருள்களின் பண்புகளைப் புலப்படுத்துக.

———————